
Madurai
July 15 - Aug 14 2015
Vol-06 Issue-1


# KAYAL


In Pursuit Of Truth And Truths


MK University
E-Lab Journal from the Department of Journalism & Science Communication

## தீராத விவாதம்





Page - 3


Page - 5


Page - 5


Page - 6


Page - 6


Page - 7


Page - 7


# தீராத விவாதம்

மரணதண்டனை வேண்டுமா? வேண்டாமா? ஏன்ற விவாதத்திற்கு நாடெங்கும் பல கருத்து வேறுபாடுகள் எழுந்த வண்ணம் இருக்கின்றன.

'உலகின் மூன்றில் ஒரு பங்கு நாடுகள் மரணதண்டனைக்கு தடை விதித்திருக்கும் வகையில், இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாட்டில் மரணதண்டனை அவசியம் தானா? மேலும் தனிமனித உரிமைகளை கலைக்கும் ஒரு சட்டமாக அமைந்திருப்பதோடு, சிறுபான்மையினரும், ஏழை எளிய மக்களும் இதில் பெருவாரியாக தண்டிக்கப்படுகின்றனர். கண்ணுக்கு கண் போராடுவதால் மட்டும் நாட்டில் நடக்கும் குற்றங்களை குறைத்துவிட முடியுமா?' என்று ஒரு பக்கம் மக்கள் மரணதண்டனையை எதிர்த்து வர, மற்றொரு பக்க "மரணதண்டனையை இருந்தால் மட்டுமே நாட்டின் பாதுகாப்பு வளப்படும் எனச் சொல்லி வருகின்றனர். இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் 'அரிதிலும் அரிதான வழக்குகளில்' மட்டுமே இத்தீர்ப்பு வழங்கப்படுகிறது. மேலும், நாட்டின் அமைதியை குலைக்கும் விரோதிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதே நியதி. எனவே, மரணதண்டனை நாட்டின் அவசியத் தேவை" என்கின்றனர் ஆதரவாளர்கள்.

இவ்வாறு விவாதங்கள் பலகோணங்களில் இருக்க, இத்தண்டனை குறித்து மனித உரிமை ஆய்வாளர்கள், சட்டவல்லுநர்கள் மற்றும் பொது மக்களின் கருத்துக்களை கேட்டோம்...

மரணதண்டனை என்பது இந்தியாவில் மட்டுமல்ல உலகத்திலேயே இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். ஒரு மரணத்துக்காக இன்னொரு மரணதண்டனையாக அமையாது. மேலும், உலகத்திற்கே அடையாளமாக இருக்கக்கூடிய இந்திய ஜனநாயகத்திற்கு இப்படிப்பட்ட மரணதண்டனைகள் அன்றைக்கு ஆளுகிற ஆட்சியாளர்களுடைய மதச்சார்புகளின் அடிப்படையில் நிறைவேற்றப்படுவது மிக வருந்தக்கூடிய ஒன்று. ஐ.நா.சபையின் அடிப்படையில் மரணதண்டனைகளை மறுக்க வேண்டும். அந்த சித்தாந்தங்களின் வழியே இந்தியா ஐ.நா.சபையில் வாக்களிக்க வேண்டும்" என்கிறார், வழக்கறிஞர், தமிழன் பிரசன்னா.



எவிடென்ஸ் கதிர், மனித உரிமை ஆர்வலர்

மரணதண்டனை அளிப்பதால் குற்றங்கள் குறையப்போவதில்லை. எந்தஒரு மாற்றமும் நடக்கப்போவதில்லை. ஜனநாயகம் என்பது சமத்துவம் சார்ந்ததாக இருக்கவேண்டும், ஆனால், இன்றைய நிலையில் அது சாத்தியமற்றதாகிறது. எனவே, பலவீனங்களைக்கடந்து நம்பிக்கை உருவாகும்படி நம் அரசும், நீதித்துறையும் செயல்பட வேண்டும்" என்கிறார் மனித உரிமை ஆர்வலர், எவிடென்ஸ் கதிர்.



அற்புதம் அம்மாள், பேரறிவாளன் தாயார்

பேரறிவாளன் தாயார் அற்புதம் அம்மாள், "எந்த குற்றமாக இருந்தாலும் மரணதண்டனை தேவையில்லை என்பதே என்னுடைய கருத்து. ஏனெனில், அரசியல் காரணங்களால் அப்பாவிகள் பாதிக்கப்பட்டு தூக்கு கயிற்றில் நிற்பதே இன்றைய நிலை. தனிமனிதன் செய்யும்போது 'கொலை' என்று சொல்லும் நாம், அரசு திட்டமிட்டு நாள் குறித்து ஒரு மனிதனை தூக்கிலிடுவதும் கொலைக்கு சமமானதுதான். அதுமட்டுமின்றி, 'நீதிபதிகளும் மனிதர்கள்தான். அவர்களும் தவறு செய்ய வாய்ப்புண்டு, உயிரை மாய்த்த பின்னர் உணருவது நியாயமல்ல, போன உயிர் போனதுதான். இந்நிலையில், ஆயுள்தண்டனை வழங்கப்படலாம். அதிலும் 14 ஆண்டுகள் சிறையிலடைப்பதை தவிர்க்க வேண்டும். 8 ஆண்டுகளிலேயே குற்றவாளிகளின் குடும்பங்கள் சிதைக்கப்படுகின்றது. இதையெல்லாம் மனதில் கொண்டு மாநில அரசின் உத்தரவோடு 8 ஆண்டுகளிலேயே குற்றவாளிகள் விடுவிக்கப்படலாம்' என்று உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி கிருஷ்ண ஐயர் கூறியுள்ளார். அதனால், இந்த உட்சபட்ச தண்டனையை எந்நிலையிலும் வழங்கக்கூடாது" என்று உரத்துக் குரல் கொடுத்தார், தன் மகன் பேரறிவாளனின் விடுதலைக்காக 24 ஆண்டுகளாக போராடிவரும் அற்புதம் அம்மாள்!




ஜெயமோகன், சட்டக்கல்லூரி மாணவர்

"மரணதண்டனை இல்லாமலிருந்தால் குற்றங்கள் பெருக அதிக வாய்ப்புள்ளது. அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே இந்திய நீதித்துறை இத்தண்டனையை வழங்குகிறது. இதை நாம் எதிர்த்தால் குற்றங்கள் நடப்பதற்கு நாமே வழிவகுத்ததுபோல் ஆகிவிடும்" என்கிறார், சென்னை, சவிதா சட்டக்கல்லூரி மாணவர், ஜெயமோகன்.

"நம்நாட்டில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றங்கள் பல பெருகிவிட்டன. இந்நிலையில், மரணதண்டனை என்பது தவறு செய்பவர்களுக்கு அச்சம் தரும். எனவே, இத்தண்டனை வழங்குவதில் தப்பில்லை" என்கிறார், ஆட்டோ ஓட்டுநர், சின்னையா.

இப்படி பல கருத்துக்கள் இருக்க, அகிம்சை வழியில் சுதந்திரம் பெற்ற நாம், மனிதநேயம் மலரும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வரும் தலைமுறையினரின் முடிவில்லா முனைப்பினால் மட்டுமே இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணமுடியும்..



தமிழன் பிரசன்னா, வழக்கறிஞர்

கட்டுரை : A. பார்வதி

படங்கள் : கூகுள் மற்றும் சமூகவலைதளம்

Madurai
Jan 1 - Jan15 2016
Vol-06f Issue-5


# KAYAL

In Pursuit Of Truth And Truths


MK University

E-Lab Journal from the Department of Journalism & Science Communication

# ஜல்லிக்கட்டு....
# மல்லுக்கட்டு....



# ஜல்லிக்கட்டு காளையும் காளையர்களும்.....




ஊர் எங்கும் கரும்புக்கட்டுகளும், மஞ்சள் குலைகளும், கூரைப் பூ அவாரம் பூ முடிப்புகளும், பொங்கலின் வருகையை நமக்கு மகிழ்ச்சியுடன் உணர்த்தும். கிராமங்களின் பொங்கல் இன்னும் ஆனந்தமானது. தங்களுக்கு பால் கொடுக்கும் கோமாதாவிற்கும், தங்கள் விவசாயத்திற்கு உதவும் காளைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் பண்டிகையாக பொங்கலை கொண்டாடுகின்றனர். ஜல்லிக்கட்டிற்கு காளைகளை அனுப்புபவர்களுக்கு பொங்கல் தான் திருவிழா.

அந்த வகையில் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீரவிளையாட்டு போட்டிகளில் ஒன்றான ஜல்லிக்கட்டு,மதுரை அருகில் உள்ள அவனியாபுரத்திலும் நடைபெறும்.அங்கிருக்கும் மாடுகளையும் மாடுபிடிவீரர்களையும் காண சென்றோம்.கிராமத்திற்கு அருகேயுள்ள அய்யனார்கோவில் திடலில் ஜல்லிக்கட்டு காளைகளுடன் வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.நாம் அவர்களிடம் நம்மை பற்றி அறிமுகம் செய்தவுடன் மிகுந்த ஆர்வத்துடன் நம்மிடம் பேச முன்வந்தனர்."ஒருவழியாக இந்த வருடம் ஜல்லிக்கட்டு நடைப்பெற போகிறது" என்று பேச ஆரம்பித்த பாலசுப்பிரமணி,"என் பாட்டன்,பூட்டன் காலத்திலிருந்து என் குடும்பம் ஜல்லிக்கட்டு காளைகளை வளர்த்து வருகிறது. மாடுகளோடு ஒன்றி பழகுவதினால் அதன் குணநலன்,இயல்புகளை சிறுவயதிலிருந்து தெரிந்துகொண்டேன் ,பின் எனக்கு காளையை எப்படி லாவகமாக பிடிப்பது போன்ற பயிற்சிகளை என் தாத்தா கற்றுக்கொடுத்தார். தினசரி காலை,மாலை இரு வேளைகளிலும் ஓட்டம்,நடை மற்றும் உடற்பயிற்சி போன்ற பயிற்சிகள் மாடுபிடி வீரர்களை பலப்படுத்துகிறது.வீரர்களுக்கு கொடுப்பதை போன்றே மாடுகளுக்கும் நடைப்பயிற்சி, நீச்சல்பயிற்சி, மண்மேடுகளில் கொம்பை குத்த செய்யும் பயிற்சி ஆகியவற்றை அளிக்கின்றோம" எள்றார்.மாடுபிடி வீரர்கள் அனைவரும் ஒரு மாதம் தொடர் பயிற்சி எடுக்கிள்றனர்.

ஜல்ல்க்கட்டு நடைபெருவதற்கு ஒரு வாரம் முன்பெ கடுமையான விரதம் கடைப்பிடிக்கத் தொடங்கி மது,மாமிசம்,புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்களை விட்டு விடுகின்றனர். ஜல்லிக்கட்டுக்கு செல்வதற்கு முன் தாய் ,தந்தையிடம் ஆசிர்வாதம் வாங்கி செல்வதையும் வழக்கமாக லைத்திருக்கின்றனர். "வாடிவாசலில் நிற்கும் போது மன தைரியம், தன்னம்பிக்கை, பயமற்ற விடாமுயற்சி போன்ற பண்புகளை கொண்டு இருப்பது அவசியம். அப்போழுதுதான் மாட்டினை எளிமையாக அடக்க முடியும். நான் ஜல்லிக்கட்டில் மாட்டினை அடக்கி டிவி, கட்டில், பீரோ, வெள்ளி, பித்தளை பானைகள் என ஏராளமான பரிசுகளை பெற்றிருக்கின்றேன். ஆனால் நாங்கள் நகைக்காகவும், பரிசு பொட்களுக்காவும் மட்டும் ஜல்லிக்கட்டில் கலந்து கொள்ளவில்லை. எங்கள் முன்னோர்கள் கட்டி காப்பாற்றி வந்த பாரம்பரியம், கலாச்சாரம், பண்பாட்டினை பாதுக்காப்பது எங்கள் கடமை. அந்த பணியினைத்தான் நாங்கள் செய்து வருகிறோம். ஜல்லிக்கட்டு மாட்டினை தெய்வமாக வழிபட்டு கொண்டிருக்கிறோம், அது எங்கள் குடும்பத்தில் ஒரு நபர், அவ்வாறு இருக்க நாங்கள் எவ்வாறு மாட்டினை வதைக்கவோ,துன்புறுத்தவோ செய்வோம்?" என்றார்.

மாடுபிடி வீரர்களுக்கு ஜல்லிக்கட்டில் காயங்கள் அதிகம் ஏற்படுவதோடு காயங்களைத்தான் பெருமைக்கான அளவீடாக வைத்துள்ளனர்.களத்தில் எந்தளவிற்கு காயம் ஏற்படுகிறதோ அந்தளவிற்கு காளையை பிடிப்பதில் ஆர்வம் கூடிக்கொண்டே இருக்குமாம். இதில் மாட்டினை அடக்கும் போது வாடிவாசலின் இருபுறங்களிலும் இருந்து இலட்சக்கணக்கான பார்வையாளர்கள் தரும் உற்சாகம் மிக முக்கிய காரணம்.ஜல்லிக்கட்டில் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், மாடு பிடிவீரர்கள் மற்றொரு மாடு பிடி வீரரோ அல்லது ஜல்லிகட்டு மாடோ கீழே விழுந்துவிட்டால் அதனைத் தூக்கிவிட்டு உதவுவர். அத்தகைய சிறந்த மனப்பான்மையையும் இங்குதான் காண முடியும். ஜல்லிக்கட்டில் கலந்து கொள்ள பல பகுதிகளிலிருந்தும் மாடுப்பிடிவீரர்கள் வருகிறார்கள். சாதிப் பாகுபாடுயின்றி சகோதர உணர்வுடன் கலந்து கொண்டு வெற்றியும், பரிசுகளையும் வாங்கி செல்லுகிறார்கள்.

இவரைத் தொடர்ந்து பேசிய பாரதி, "மாடுபிடி வீரருக்கு தன்னம்பிக்கை, வைராக்கியம்,வீரம் தான் முக்கியம். வாடிவாசலில் நிற்கும் போது பயத்தினை துறக்க வேண்டும். பயந்தால் மாடு பிடிக்க முடியாது. மாடு பிடிக்கும் போது காயங்கள் எற்படுவது சகஜம்தான். அவ்வாறு காயங்கள் ஏற்படும்போது அருகிலுள்ள மருத்துவ குழுவிடம் முதலில் முதலுதவி அளிக்கப்படும். ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்திற்கு அருகிலேயே எப்பொழுதும் ஒரு ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவ குழு இருந்து கொண்டு இருக்கும். பெரிய காயம் ஏற்பட்டால் முதலுதவி அளித்து பெரிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவார்கள். தற்பொழுது மாடுகளுக்கும், மாடுபிடி வீரர்களுக்கும் முறையான மருத்துவ பரிசோதனை செய்து தான் அனுமதிக்கபடுகிறார்கள். முக்கியப் பிரமுகர்கள் அளிக்கும் அன்பளிப்பு .



தொகையினை வைத்தும் கோவில் பக்தர்கள் அளிக்கும் நன்கொடைகளை வைத்தும் தான் பரிசுப் பொருட்கள் அளிக்கப்படுகிறது இவ் விளையாட்டு எங்கள் இரத்ததோடு கலந்த ஒன்று, எந்த சட்டத்தாலும் இதை எங்களிடமிருந்து பிரிக்க முடியாது"என்று கூறி முடித்தார்.

இவர்கள் அனைவரிடத்திலும் பேசியதிலிருந்து, மாடுகளுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும், மாடுகளுக்கும் அதை வளர்ப்பவர்களுக்கும் இடையேயான பந்தத்தை நம்மால் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. ஜல்லிக்கட்டு மாட்டினை தன் குடும்ப உறுப்பினராகவும், தெய்வமாகவும் பாவிக்கும் இவர்கள், அதனைத் துன்புறுத்துகின்றனர் என்று கூறுவது நியாயமே அல்ல. மேலும் ஜல்லிகட்டுக்காக இவர்கள் காட்டும் ஈடுபாடும், உழைப்பும், நமது கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றை பேணி பாதுகாக்கும் கடமை தமிழர்களாகிய நம் அனைவரிடமும் இருக்கின்றது.

கட்டுரை:அ.மணிகண்டன்
படம்: ஜீ.அஜய் குமார்

MADURAI
JULY NOV 2018

# KAYAL

In Pursuit Of Truth And Truths

MK UNIVERSITY

E-lab Journal From The Department of Journalism & Science Communication

## தடுமாறுகிறதா திராவிடம்?



## மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கைது.



மதுரை: செப் 2

மகாராஷ்டிராவில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கைது. பிரதமரின் செல்வாக்கு சரிவதை ஈடுகட்டுவதற்காக சமூக செயற்பாட்டாளர்கள் மீது பழி சுமத்தி ஆதாயம் தேட பாஜக முயற்சி என குற்றச்சாட்டு.

மகாராஷ்டிராவில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டதற்கு வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள் பேராசிரியர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மதுரை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் வு.லஜபதிராய மதுரையில் வெளியிட்ட கண்டன அறிக்கையில் மகாராஷ்டிரா மாநிலம் பீமா கோரேகான் கலவரம் பிரதமர் மோடியை கொல்ல சதி திட்டம் தீட்டியது ஆகிய இரு வழக்குகளில் மக்கள் உரிமை செயற்பாட்டாளர்கள் சுதா பரத்வாஜ், வெர்னான் கன்சால்வேஸ், அருண் பெரெய்ரா, கவுதம், நவ்லகா எழுத்தாளர் வரவர ராவ் ஆகியோரை அம்மாநில போலீஸார் ஆகஸ்ட் 28ம் தேதி கைது செய்தனர். இதற்கு இந்தியா முழுவதும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

பிரதமரை கொல்ல சதி, பீமா கோரேகான் சம்பவங்களை இணைத்து செய்தி பரப்புகின்றனர். பீமா கோரேகான் போர் 1818ல் நடந்தது. இதன் 200வது ஆண்டு நினைவு நாளில் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் பங்கேற்றனர்.

இதில் ஏற்பட்ட கலவரம் குறித்து அவர்களிடம் ஏன் விசாரிக்கவில்லை.சமூக செயற்பாட்டாளர்கள் ஐந்து பேர் கைதுக்கு அடிப்படை ஆதாரம் எதுவுமில்லை. அவர்களின் கைது அரசியல் சட்டம், மனித உரிமைக்கு எதிரானது. மகாராஷ்டிரா ஏடிஜிபி பரம்பீர்சிங் காட்டிய பிரதமர் கொலை சதிக் கடிதத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. 5 பேரையும் தேசிய பாதுகாப்பு (ஊபா) சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். இச்சட்டத்தில் கைதானதால் ஜாமீன் பெற முடியாது. பிரதமரின் செல்வாக்கு சரிவதை ஈடுகட்ட சமூக செயற்பாட்டாளர்கள் மீது கொலைப்பழி சுமத்தி ஆதாயம் தேட பாஜக முயற்சி செய்கிறது.

எனவே 5 பேரின் கைதை கண்டிக்கிறோம். அவர்கள் மீதான வழக்குகளை ரத்து செய்ய வேண்டும். அவர்களை வீட்டுக் காவலில் இருந்து உடனே விடுவிக்க வேண் டும். இவ்வாறு அவர் கூறினார்.

ம.முகமது சமீர்

## சாலை பாதுகாப்பு மற்றும் தலைக்கவச விழிப்புணர்வு முகாம்

மதுரை, செப் 28

யாதவர் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் சாலைப்பாதுகாப்பு மற்றும் தலைக்கவச விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் தல்லாகுளம் போக்குவரத்து காவல் உதவி ஆணையர் டி.ரவிச்சந்திரன், போக்குவரத்து ஆய்வாளர் எம்.தனசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் மற்றும் சாலை விதிமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியத்தையம் விளக்கிக்கூறினார். இந்தியாவில் தலைக்கவசம் அணியாமல் ஏற்படும் விபத்துகளை பற்றியும், சாலை விதிமுறைகளை பின்பற்றாமல் ஏற்படும் உயிர் இழப்புகளை பற்றியும், விபத்துகளை தவிர்ப்பதற்காக போக்குவரத்து காவல் துறை எடுத்து வரும் முயற்சிகளைப் பற்றியும் கூறினார். காவல் உதவி ஆணையர் டி.ரவிச்சந்திரன் எந்தெந்த சாலை விதிமுறைகள் செய்யப்படுகிறன்றன என்றும், 10ஏ சட்டம் பற்றியும் மாணவர்களுக்கு விரிவாக கூறினார். முன்னதான இந்நிகழ்ச்சியை திட்ட ஒருங்கிணைப்பானர் ஜெயபாலன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் அழகேசன் தொடங்கி வைத்தார் பின்னர் சுயநிதிப்பிரிவு இயக்குனர் சிவாஜிகணேசன் வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்களின் சாலைப்போக்குவரத் குறித்து கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட்டது.

செ.ஸ்ருதி

## சாலை உயர்வினால் தலை மறைந்த சடையாண்டி உருவச்சிலை

சாலை உயர்வு தான் காரணம் என்று அகழ்வாராய்ச்சியாளர்கள், குறிப்பிடுகின்றனர். ஏழுகடல் விதி ராயகோபுரம் கற்தூண்களில் சடையாண்டியின் உருவ சிலையானது செதுக்கப்பட்டுள்ளது. சாலையின் உயர்வு காரணமாக பள்ளத்தில் இருப்பதால் மேலிருந்து கீழ் நோக்கி வழிபடுவது போல் அமைந்துள்ளது. முந்தைய காலங்களில் வழிபடுவதற்கு எளிதாக அமைந்துள்ள இக்கோவில் தற்போது பள்ளத்தில் இருப்பதாலும்



சுற்றுப்புறம் அணைத்திலும் கடைகள் ஏற்றுமதி, இறக்குமதி என்று தினந்தோறும் கூட்டம் நிரம்பிய வண்ணம் இருப்பதாலும் இக்கோவிலின் அடையாளமானது பலரின் பார்வைக்கு அலங்கரிப்பது, பூசாரிகளுக்கு சிரமம் அளிக்கும் வண்ணம் உள்ளது. அதிகாலை சென்றால் மட்டுமே எளிதில் காணக்கூடிய ஒன்றை இச்சடையாண்டி சிலையானது அமைந்துள்ளது. இவ்வாறாக நகரமயமாக்குதலின் முலம் இதுப்போன்ற ஏராளமான வரலாறு மறைக்க மற்றும் மறக்கக்கூடிய சூழல் நிகழ்கிறது என்று சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர்.

தா.அழகுலெட்சுமி

## பல்கலைக்கழகத்தினுள் துறை சார் பயணம்

மதுரை, செப் 27:

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறை மாணவர்கள் இன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு பயணமாக வந்தனர்.




காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தொலைநிலை கல்வியியல் இளங்கலை கல்வியியல் மாணவர்கள் பலர் (2017-2018) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உள்ள கல்வியியல் துறையில ஒரு நாள் பயணமாக வந்தனர். இந்த பயணமானது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைமுறையில் உள்ள புதிய மேம்படுத்தப்பட்டுள்ளது. இதைதப்பற்றி கல்வியியல் துறை பேராசிரியர் திரு.கண்ணன் கூறியதாவது இன்று இங்கு வருகை தந்துள்ள அழகப்பா பல்கலைக்கழக மாணவர்களுக்கு எங்கள் துறையை பற்றியும் முற்றிலுமாக தெரிந்து கொள்ளும் விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

செ.நவீன்